2.12.2025 O.S. 113/2018 பி.வா.சா.1 மிக்கேல் அம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

எனது அப்பா வழக்கில் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தை கடந்த 5.10.2016ம் தேதி எனக்கு ஒரு ஏற்பாடு ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஏற்பாடு ஆவணத்தில் புல எண்.73/1ஏ ல் வடபாதியை எழுதி கொடுத்துள்ளார் என்றால் இல்லை. புல எண். 73ஐ தான் எழுதி கொடுத்துள்ளார். என்னிடம் காண்பிக்கப்பட்ட வா.சா.ஆ 2 ஆவணத்தில் புல எண்.73/1ஏ என குறிப்பிட்டு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளளது என்றால் எழுதி கொடுக்கும் போது எனது அப்பா தவறுதலாக எழுதி கொடுத்துள்ளார். புல எண்.73/1ஏ–ல் எங்களுக்கு சொத்து இல்லை, புல எண். 73/1ல் 1 ஏக்கர் 37 செண்டு வடபாதியில் உள்ளது. பெரிய அந்தோணி தேவர் எனது பெரியப்பா என்றால் சரிதான். எனது பெரியப்பாவிற்கும், எனது அப்பாவிற்கும் எப்போது பாகம் நடந்தது என்றால் 1987ம் ஆண்டு சரிபாதியாக 68–1/2 செண்டு பிரித்து கொடுக்கப்பட்டது. புலஎண்.73/1–ல் 1 ஏக்கர் 37 செண்டு தவிர்த்து வேறு சொத்துக்கள் இல்லை. புலஎண்.73/1–க்கு மேல்பக்கம் எனது அப்பாவிற்கும், பெரியப்பாவிற்கும் சொத்து உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ 2 ஆவணத்தில் மேற்கு எல்கை என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் என் கையிருப்பு மனை என சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ 2 ஆவணத்தில் மொத்தம் ஏக்கர் 1.16ல் வடபக்கம் செண்டு 58 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சொல்லப்பட்டுள்ளது. 1 ஏக்கர் 37 செண்டில் 21 செண்டு இடத்தை வாதிகள் எடுத்து கொண்டார்கள். மீதமுள்ள 1 ஏக்கர் 16 செண்டில் பாதியை பற்றி சொல்லப்பட்டுள்ளது.

வா.சா.ஆ 2 ஆவணத்தில் மேற்கு எல்லை என்பது சர்வே எண்.74 ஐ குறிக்கும் என்றால் இல்லை. வா.சா.ஆ 3 சீர்திருத்தல் ஆவணத்தில் சொத்து விபரமானது சர்வே எண். 73/1 ஏக்கர்1 செண்டு 37 ல் வடபாதி கிழமேலாக இருக்கும் செண்டு 68.50 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்திற்கு மேற்கு எல்லை என்ன காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் கையிருப்பு புஞ்சை என காட்டப்பட்டுள்ளது. இந்த பாதி சொத்திலும் 10 செண்ட் இடம் என் அப்பா வசம் உள்ளது. வா.சா.ஆ 3 ஆவணமானது எனக்குரிய ஆவணம் தான். வா.சா.ஆ 3 ஆவணத்தின்படி விஸ்தீரணத்தை சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே 58 செண்டு என சொல்லப்பட்டிருந்ததை வா.சா.ஆ 3 ல் 68.5 என மாற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதில் 68.5 செண்டு யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு 58.5 செண்டும், என் அப்பாவிற்கு 10 செண்டு பாத்தியப்பட்டது. எனக்கு மட்டும் 68.5 சொத்து பாத்தியப்பட்டதாக வா.சா.ஆ 3 ஆவணத்தின்படி சீர்திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் என்னவென்றால் அது எனக்கு கொடுக்கப்பட்ட சொத்தாகும். வா.சா.ஆ 3 ல் சொல்லப்பட்டுள்ள நான்கு எல்கைக்குள் 68.5 செண்டு உள்ளதாக நான் சொல்லுகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ல் உள்ள எல்கையும், வா.சா.ஆ 3 ல் உள்ள எல்கையும் ஒரே எல்கைகள் தான் என்றால் வா.சா.ஆ 3 ல் உள்ள நான்கு எல்கை சரியானது. வா.சா.ஆ 2 ல் உள்ள எல்கை சரியானது இல்லை. இதில் எந்த எல்கை தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தெற்கு பகுதி தவறாக சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ 3 ல் ஆவணத்தில் கடைசி பக்கத்தில் சொத்து மதிப்பிலோ, எல்கையிலோ எந்த மாற்றமும் இல்லை என எனது அப்பா எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எந்த எல்கையும்

எங்களுக்கு பிரச்சனை இல்லை. புல எண்.73/1பி என்பது கணபதி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தா என்றால் எனக்கு தெரியாது. இந்த சொத்திற்கும், எனக்கும் சம்பந்தம் இல்லை. புல எண். 73/1பி –க்கு கணபதி பெயரில் பட்டா உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.